சார்பு நீதிமன்றம், செய்யார், திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை-**திரு.சி.குமாரவர்மன், எல்.எல்.எம்.,**

சார்பு நீதிபதி, செய்யார்.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், 10ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 163/2020**

**CNR No.TNTM04-000379-2020**

ஜோதிமணி ........ வாதி

.......எதிராக.......

குமாரசாமி ........ பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 14.09.2020 ம் தேதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் ஆஜராகாததால் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதிக்கு பிரதிவாதி வழக்குத்தொகை ரூ. 8,56,666/- மற்றும் பின் வட்டியும், இவ்வழக்கின் செலவுத் தொகையும் செலுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும்.

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்-

வாதியிடம் பிரதிவாதி 10.08.2017 ஆம் தேதி ரூ.5,00,000/-ம் கடன் பெற்றுக்கொண்டு கடன் தொகைக்கு ஆண்டுக்கு 24% வட்டி சேர்த்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு வழக்கு கடனுறுதிசீட்டை எழுதிக்கொடுத்தார். வாதி பலமுறை பிரதிவாதியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி

செலுத்தவில்லை. கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரி வாதி பிரதிவாதிக்கு 16.07.2019 ம் தேதி அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி அறிவிப்பிற்கு பிறகும் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. ஆதலால் கடன் தொகையை வசூலிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதி வழக்குரையில் கூறியுள்ளார்.

2. பிரதிவாதி வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் அழைத்தும் ஆஜராகததால் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3. இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதிகள் என்னவென்றால்,

1. வழக்கில் கோரியுள்ள ரூ.8,56,666/- ம் மற்றும் பின்வட்டி வாதிக்கு அளிக்கத்தக்கதா?

2. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது?

4. வாதி தரப்பில் வாதி திரு. ஜோதிமணி வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு,10.08.2017 தேதிய கடனுறுதிசீட்டு வா.சா.ஆ.1, 16.07.2019 தேதிய அறிவிப்பு வா.சா.ஆ.2, அறிவிப்பு திருப்பப்பட்ட அஞ்சல் உறை வா.சா.ஆ.3 என ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>பிரச்சனை எண்</u>.1

வழக்கில் கோரியுள்ள ரூ.8,56,666/- ம் மற்றும் பின்வட்டி வாதிக்கு அளிக்கத்தக்கதா?

வாதியிடம் பிரதிவாதி 10.08.2017 ஆம் தேதி ரூ.5,00,000/-ம் கடன் பெற்றுக்கொண்டு கடன் தொகைக்கு ஆண்டுக்கு 24% வட்டி சேர்த்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு வழக்கு கடனுறுதிசீட்டை எழுதிக்கொடுத்தார். வாதி பலமுறை பிரதிவாதியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரி வாதி பிரதிவாதிக்கு 16.07.2019 ம் தேதி அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி அறிவிப்பிற்கு பிறகும் பிரதிவாதி பெற்றுக்கொண்டும் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. ஆதலால் கடன் தொகையை வசூலிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதி தரப்பில் வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

6. பிரதிவாதி வாதியிடம் 10.08.2017 ம் தேதி ரூ.5,00,000/- கடன் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுத்துள்ளார். வாதி பிரதிவாதியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தாமல் இருந்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வாதி அவரது வழக்கை வா.சா.1 சாட்சியம் மூலமாகவும் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் மூலமாகவும் மெய்ப்பித்துள்ளார். வாதியின் வழக்கை பிரதிவாதி மறுத்து வழக்கு முன்வைக்கவில்லை. ஆதலால் வாதி கோரியுள்ள ரூ.8,56,666/-ம் மற்றும் பின்வட்டி வாதிக்கு அளிக்கத்தக்கது என தீர்மானித்து பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காணப்படுகிறது.

7. <u>பிரச்சனை எண்.2</u>

வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது?

வாதி கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரிய உடன் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தியிருந்தால் வாதி வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பிரதிவாதி வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளார். ஆதலால் வழக்கு செலவுத்தொகை வாதிக்கு அளிக்கத்தக்கது என தீர்மானித்து பிரச்சனை எண்.2 க்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதிக்கு பிரதிவாதி வழக்கு தொகை ரூ.8,56,666/-ம் அதில் ரூ.5,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியும் தீர்ப்பாணை தேதி முதல் தொகை செலுத்தும் நாள் வரை 6% வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10- ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

ஓம்/-சி.குமாரவர்மன்

சார்பு நீதிபதி,

செய்யார்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>

வா.சா.1. திரு.ஜோதிமணி

<u>வாதி தரப்பு சான்றவாணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.08.2017 | கடனுறுதிசீட்டு |
| வா.சா.ஆ.2 | 16.07.2019 | அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | - | அறிவிப்பு திருப்பப்பட்ட அஞ்சல் உறை |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> -

இல்லை.

ஓம்/-சி.குமாரவர்மன்
சார்பு நீதிபதி,
செய்யார்.